**தலைப்பு 118 – கமத்தொழில் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன கமத்தொழில் அமைச்சால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 118 – கமத்தொழில் அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 26 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கமத்தொழில் அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.18 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பது அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை. | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 127(1) (அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | 1. செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாகத் தயாரிக்கப்படாமை. | 2.2.1 |
| | | 2. பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை | 2.3.1 |
| | | 3. பாதீட்டு மதிப்பீடுகள் நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை. | 2.11 (அ) (ஆ) |
| | | 4. கட்டுநிதி மதிப்பீட்டை தயாரிப்பதில் குறைபாடுகள் | 2.13 |
| | | 5. பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை. | 2.15 |
| 127(1) (ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஒழுங்கு விதிகளை ஏற்படுத்தும் முறையொன்று | 1. முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.6 |
| | | 2. முகாமைத்துவ குறைபாடுகள் | 2.8 |

| | | | |
|---|---|---|---|
| | தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | 3. தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வு பந்திகள் | 2.7 |
| | | 4. இணக்கமின்மைகள் | 2.16 |
| | | 5. மனித வள முகாமைத்துவத்தில் குறைபாடுகள் | 2.17 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையிலும் அமைச்சின் பரிசீலனைக்கு உட்படுத்தல். | 1. எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை. | 2.2.3 |
| | | 2. காலம் தாமதித்து வேலைகளை ஆரம்பித்த செயற்திட்டங்கள் | 2.2.5(அ) |
| | | 3. வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் செயலாற்றல்களை நிறைவேற்றாமை | 2.2.7 |
| | | 4. வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களை உரிய திகதியில் ஆரம்பிக்காமை | 2.2.5(ஆ) |
| | | 5. பெறுகை நடைமுறைகளை அமுல்ப்படுத்துவதிலுள்ள குறைபாடுகள் | 2.3.2 |
| | | 6. சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.6 |
| | | 7. பணப் பெறுமதிக் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் | 2.9 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | 1. வாகனப் பயன்பாட்டின் குறைபாடுகள் | 2.4(அ) |
| | | 2. பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் | 2.4(ஆ) |
| | | 3. ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல். | 2.4(ஈ) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 4. | வெளித் தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள் | 2.4(இ) |
| | | 3. | பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுவதில் பலவீனங்கள் | 2.10 |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சினால் பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல். | 1. | வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை | 2.2.6 |
| | | 2. | வருடாந்த பாதீட்டு எல்லையை விஞ்சி கடப்பாடுகளுக்கு உட்படல் | 2.5.1 |
| | | 3. | கட்டுநிதிக் கணக்குகளிலுள்ள குறைபாடுகள் | 2.13 |
| | | 4. | பொது வைப்புக் கணக்குகளிலுள்ள குறைபாடுகள் | 2.14 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும். | 1. | வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தாமை | 2.11(அ) |
| | | 2. | மிகை நிதி ஏற்பாடுகள் வழங்குதல் | 2.11(ஆ) |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பிற்கு வெளியே காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை கூடுதல் கவனத்துடன் செயற்பாட்டு அமைச்சின் பரிசோதனைக்கு உட்படுத்துதல் | | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் | 2.12 |
| 127(7) | உத்தியோகத்தர்கள் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் | | நிதி சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைப்பணம் பெற்றுக்கொள்ளாமை | 2.18 |

கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும், நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந் நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் /ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்களை விதிப்பதனை கண்காணிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதால் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். அரசாங்க கணக்கு குழுவின் முன் தோன்றுவதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவுபடுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுடன் ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைப் பொறுப்பாகும்.

## 2. பொருன்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 அமைச்சின் பிரதான கடமைப் பொறுப்புக்கள்

விவசாயத் துறையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னோக்கிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரித்தலும் வசதிகளை வழங்குதலும், அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கு கொள்கை ரீதியான வழிகாட்டல்களை வழங்குதலும், நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் செயலாற்றல்களை மேற்பார்வை செய்தலும் அமைச்சின் பிரதான கடமைப் பொறுப்புக்களாகும்.

### 2.1 செயலாற்றல்

#### 2.2.1 திட்டமிடல்

அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 02 திணைக்களங்கள் 09 நியதிச்சட்ட நிறுவனங்கள், ஒரு வெளிநாட்டு செயற்திட்டம், 02 நிதியங்கள் என்பவற்றினால் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காகத் தயாரிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிப்பட்டன.

(அ) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 262.70 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டுள்ள 02 பிரதான நடவடிக்கைகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் தாபனக்கட்டமைப்பு, அங்கீகரித்த பதவியணியினர், தற்பொழுது சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணியினர்,

என்பன தொடர்பான விபரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதித் தேவைப்பாட்டுத் திட்டமானது செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொதுமக்கள் தெரிந்து கொள்வதற்காக கமத்தொழில் கண்காட்சிகளையும் ஊடாகத்துறை நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்தும் உபாயங்களுக்குரிய மாவட்ட மாவட்டத்திலான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துதல், விவசாயிகளுக்குப் பயிற்சியளித்தலும் தெளிவுபடுத்தலும் மற்றும் விசேட அபிவிருத்திச் செயற்திட்டங்கள் ஆகிய 03 நடவடிக்கைகளுக்காக ரூபா 50 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அந் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) படிவங்களைத் தயாரித்தல், கமத்தொழில் ஆராய்ச்சிகளையும் உற்பத்தி உதவியாளர்களுக்காக பயிற்சி செயலமர்வுகளையும் ஒழுங்குபடுத்தும் உபாயங்களை உள்ளடக்கி இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்துதல், படிவங்களைத்தயாரித்தலும் பயிற்சியும் என்பவற்றை உள்ளடக்கிய 04 உப நடவடிக்கைகளுக்காக ரூபா 40 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படடிருந்தும் அந் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்நாட்டு உணவு மத்திய நிலையத்தின் மூலம் உள்நாட்டு உணவு உற்பத்தியை மேம்படுத்தலும் பெண்களை வலுப்படுத்தலும் மற்றும் பிரதான பழப்பயிர்களின் விளைதிறன் தொடர்பான நடத்தைகளை ஆய்வு செய்தல் ஆகிய உபாய மார்க்கங்களுக்குரிய 08 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 4.42 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அச்செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் கைவிடப்பட்ட வயல் காணிகளை பயிர்ச்செய்கை பண்ணுவதற்காக ரூபா 20 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அச்செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 3,000 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் 1500 சிறிய குளங்களைப் புனரமைத்தல் மற்றும் புனர் நிர்மாணித்தல் உபாய மார்க்கங்களின் கீழ் 09 செயற்பாடுகளுக்காக ரூபா 1,938.40 மில்லியன் செலவுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட செயல் முன்னேற்றம் 5 சதவீதத்திலிருந்து 71 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) கைவிடப்பட்ட வயல்காணிகளை மீண்டும் பயிர்ச்செய்கை பண்ணும் உபாயத்தின் கீழ் 2,344 ஹெக்டெயர் வயல்களின் விசேட மண் பிரச்சினைகளை புனரமைப்பதற்கு ரூபா 5.8 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது ரூபா 1.9 மில்லியன் செலவு செய்து 378 ஹெக்டயர் வயல் காணிகள் அல்லது 16 சதவீதம் அளவானவற்றில் மாத்திரம் உரிய செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருந்தது.

(இ) ரூபா 13 மில்லியன் மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் உள்நாட்டு உணவு மத்திய நிலையங்களின் மூலம் உள்நாட்டு உணவுகளை மேம்படுத்துதல் மற்றும் பெண்களை வலுப்படுத்தும் தந்திரோபாய வழிகளின் கீழ் புதிய 03 உள்நாட்டு உணவகங்களை, சிலாபம், திருகோணமலை, வெலிகாமம் ஆகிய பிரதேசங்களில் ஸ்தாபிப்பதனை உள்ளடக்கி அப்பிரதேசங்களின் தொழில் முயற்சியாளர்களின் ஆற்றல்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாக பயிற்றுவித்தல் மற்றும் தெளிவுபடுத்தல்களை உள்ளடக்கிய 05 உப செயற்பாடுகளின் செயல் முன்னேற்றம் 20 சதவீதத்திலிருந்து 46 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஈ) விவசாய கண்காட்சிகள் மற்றும் ஊடக நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும் தந்திரபோபாயங்களுக்குரிய விவசாய பண்ணைகள், ஆராய்ச்சி நிலையங்கள் என்பவறறிற்காக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் கண்காட்சிகளை நடாத்தும் உப செயற்பாடுகளின் கீழ் ஒரு விவசாயப் பண்ணையை அபிவிருத்தி செய்வதற்கும் 03 கண்காட்சிகளை நடாத்துவதற்கும் ரூபா 35 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அவற்றில் ரூபா 4.67 மில்லியன் செலவு செய்து ஒரு கண்காட்சி மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

(உ) ரூபா 9.16 மில்லியன் மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் சந்தனக் குளம் கிராமத்தை ஒரு பெரிய வெங்காய உற்பத்திக் கிராமமாக அபிவிருத்தி செய்தல் என்ற தந்திரோபாயம் தொடர்பாக விதைப் பெரிய வெங்காயங்களை வழங்குதல், விவசாயக் கிணறுகளை நிர்மாணித்தல், நீர் இறைக்கும் பம்பிகளை வழங்குதல் களஞ்சியங்களை நிர்மாணித்தல், சேதனப் பசளைகளைத் துண்டாக்கும் இயந்திரங்களை வழங்குதல் ஆகிய 07 உப செயற்பாடுகளில் ரூபா 779,300 செலவு செய்து பெரிய வெங்காய விதைகள் வழங்குதல், சேதனப் பசளைக் துண்டுபோடும் இயந்திரங்களை வழங்குதல் ஆகிய இரண்டு உப செயற்பாடுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஊ) ஈ - கமத்தொழிலுக்காக பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு பெறுகைத் திட்டத்தில் ரூபா 160 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் அதற்காக ரூபா 17.38 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.4 நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள்

மாத்தளை மாவட்டத்தில் ரூபா 23.26 மில்லியன் மதிப்பீட்டின் அடிப்படையில் தம்புள்ளை, கிம்பிஸ்ஸ, பல்லேபொல, கலேவெல, தேவஹுவ ஆகிய கமநல சபை அதிகாரப் பிரதேசத்திலுள்ள 11 குளங்களின் சிறு நீர்ப்பாசன புனரமைப்பு நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 காலதாமதத்தின் பின்னர் வேலை ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஜப்பான் அரசாங்கத்தின் மூலம் இலங்கை மத்திய வங்கியின் எதிரீடு நிதியத்தினூடாக தேசிய பயிர் நோய் தவரிப்பு சேவையின் தொழில்நுட்ப உபகரணங்களை பழுதுபார்த்தல் மற்றும் புனரமைப்புச் சொய்வதற்கு 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 259.69 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய நடவடிக்கை 2018 ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) விவசாயத்துறையை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்திற்காக உலக வங்கியின் உதவியின் கீழ் ரூபா 9,553.78 மில்லியன் கடன் விவசாய அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது. அச்

செயற்திட்டத்தை 2016 ஒக்தோபர் 15 ஆந் திகதி ஆரம்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் செயற்திட்டத்தின் வேலைகள் 2017 மார்ச் 22 ஆந் திகதியே ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.6 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாரளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் நிதி ஆண்டு முடிவடைந்து 220 நாட்களில் அதாவது 2018 ஆகஸ்ட் 09 ஆந் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.7 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் செயலாற்றல்

விவசாயத்துறையின் வினைத்திறனையும் பல்லினப்படுத்தலையும் அதிகரிப்பதற்காக விவசாயிகள் பயிற்சி, இயலளவு மேம்மாடு, கமத்தொழில் தொழில்நுட்ப மாதிரிப் பூங்காக்களைத் தயாரித்தல், உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்தல், மற்றும் உரிய நடவடிக்கைகளுக்காக ஆலோசனை உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் குறிக்கோளுடன் 2017 மார்ச் 22 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட விவாசாயத்துறை நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 700 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 81.04 மில்லியன் தொகையானது பதவியணியினரைச் சேர்த்துக் கொள்ளல், பிராந்திய அலுவலகத்தைத் தோற்றுவித்தல், தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் ஆலோசனைக் கட்டணங்களுக்காக செலவு செய்தலைத் தவிர செயற்திட்டத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்குரிய ஏனைய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளல்

### 2.3.1 பெறுகைகளைத் திட்டமிடல்

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 2,272.22 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 486.57 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அமைச்சு செயற்படுவதற்காக வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கட்டிடத்தின் உள்ளக அறைகளை பிரித்து ஒதுக்குதல், தளவிரிப்புக்கள் விரித்தல், மின்சாரம் மற்றும் வாயு சீராக்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளல், மனைப் பொருட்களை வழங்கி, பொருந்துதல், தகவல் முறைமையை வழங்குதல் என்பவற்றிற்காக ரூபா 260.85 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் இச் செலவுகள் பெறுகைத் திட்டத்தில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 பெறுகை நடைமுறைகளை அமுல்ப்படுத்துதல்

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விவசாய அமைச்சை பத்தரமுல்லை பிரதேசத்திலுள்ள ஒரு தனியார் கட்டிடத்தில் ஸ்தாபிப்பதற்காக அறைகளாகப் பிரித்து ஒதுக்கீடு செய்தல், தளவிரிப்புக்களை விரித்தல், மின்சார நடவடிக்கைகளும் வாயு சீராக்கி நடவடிக்கைகளும், மனைப் பொருட்களை கொள்வனவு செய்தல், தகவல் தொழில்நுட்ப முறைமையை வழங்குதல், என்பவற்றிற்காக ரூபா 260.85 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2.1 (இ) வழிகாட்டியின் பிரகாரம் தகைமையுள்ள மற்றும் அக்கறையுள்ள தரப்பினர்களுக்கு பெறுகைகளில் பங்குபற்றுவதற்கு சமமானதும் உச்ச அளவானதுமான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட

வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தும் அலுவலக மனைப்பொருட்களைக் கொள்வனவு செய்யும் போதும் தகவல் தொழில்நுட்ப முறைமையை வழங்குவதற்காகவும் வெளியிடப்பட்ட பத்திரிகை அறிவித்தல்களில் முறையே ரூபா 140 மில்லியன் மற்றும் 80 மில்லியன் கடன் வசதிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு கேள்விதாரருக்கு வாய்ப்பு இருக்க வேண்டும் என்ற நிபந்தனை உள்ளடக்கியிருந்ததன் காரணமாக சில கேள்விதாரர்களுக்கு விலை மனுக்களைச் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

(ii) அலுவலக மனைப்பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது 75.35 மில்லியன் குறைந்த விலைகள் சமர்ப்பித்த கேள்விதாரர் 05 ஆண்டுகள் உத்தரவாத காலத்தை வழங்கியிருந்தும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு உரிய தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்திருக்கவில்லை. எனக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் கேள்வி ஆவணங்களின் 03 ஆம் அத்தியாயத்தின் கீழ் வேண்டப்பட்டுள்ள மாதிரிகளுக்கு இணங்கியிருக்கவில்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் இணங்கினிருக்காத மாதிரி எது என்பதனை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உறுதியாகக் குறிப்பிடாது கேள்வியை நிராகரித்ததன் காரணமாக ரூபா 31.42 மில்லியன் மிகைக்கிரயத்தை மேற்கொண்டு உரிய மனைப் பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது.

(iii) மதிப்பீட்டின் பிரகாரம் அறைகளாகப் பிரித்து ஒதுக்கீடு செய்வதற்காக பயன்படுத்த வேண்டியிருந்தது. HDF (Hight Density Fiber) ஆக இருந்ததுடன் ஒப்பந்தக்காரரின் வேண்டுகோளின் அடிப்படையில் Particle Board ஈடுபடுத்துமாறு பொறியியலாளர் மதிப்பீட்டில் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தும் Particle Board வும் பயன்படுத்தப்படாது MDF (Medium Density Fiber Moard) இனை ஒப்பந்தக்காரர் பயன்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iv) கட்டிடத்தின் மேற்கூறிய நிர்மாணத்தை உடன்படிக்கைத் திகதியில் நிறைவேற்றுவதற்கு ஒப்பந்தக்காரர்களுக்கு முடியாமையின் காரணமாக உரிய தாமத காலத்திற்காக உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 17 மில்லியன் தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் அமெரிக்க டொலர் 23,572,800 செலவில் 72,000 மெட்ரிக் தொன் யூரியா பசளை இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன் இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2017 சிறுபோகத்திற்காக 18,000 மெட்ரிக் தொன் யூரியா (பிரில்ட்) வினை பதிவு செய்த வழங்குனர்களின் விலைகளின் அடிப்படையில் பெறுவனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் பின்னர் அரசாங்க பசளைக் கம்பனியின் தலைவரின் பிரேரணையின் பிரகாரம் ஆவணங்களின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்படுகின்ற (DA Terms) திறந்த சர்வதேச விலைகளைக் கோரி பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ii) 2017 நவம்பர் 09 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தல்களின் பிரகாரம் 72,000 மெட்ரிக் தொன் யூரியாவை கொள்வனவு செய்வதற்கு சர்வதேச போட்டி விலைகளின் கீழ் கேள்விதாரர்களுக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் பத்திரிகை அறிவித்தல்களின் பிரகாரம் ஆவணங்களின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யும் முறைமை பின்பற்றப்பட வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டதன் காரணமாக விலைப் போட்டி மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

(iii) இதன் காரணமாக ஒரு உள்நாட்டு கேள்விதாரர்களிடமிருந்து மாத்திரம் விலை மனு கிடைத்திருந்ததுடன் அக் கேள்விதாரரினூடாக உரிய பசளை இருப்பை இறக்குமதி செய்வதற்கு உரிய ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், பின்னர் இந்த ஒப்பந்தக்காரால் வழங்கப்பட்ட போலியான ஆய்வுகூட அறிக்கையின் காரணமாக உரிய பசளையை இறக்குமதி செய்தலை கைவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.3.13(இ) வழிகாட்டியின் பிரகாரம் இக்கேள்விதாரரின் அ.டொலர் 240,000 கேள்வி பாதுகாப்பு பிணையை அரசுடைமையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் பெறுகை நடவடிக்கை தாமதித்ததன் காரணமாக நாடு முழுவதும் தீவிரமான பசளைத் தட்டுப்பாடு உருவாகியிருந்தது.

(iv) 2017 திசெம்பர் 05 ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்ட அமைச்சரவை தீர்மானம் மற்றும் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரின் அவதானிப்புக்களின் அடிப்படையில் 2017 திசெம்பர் 11 ஆந் திகதி கூடிய நிரந்தர பெறுகைக்குழுவின் மூலம் 36,000 மெட்ரிக் தொன் யூரியா (பிரல்டி) இனைப் பெற்றுக்கொள்வதற்காக Agri Commodities Finance FZE நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு ஆயத்தமாக இருந்த சந்தர்ப்பத்தில் எதுவித காரணமுமின்றி அத்திகதிலேயே பிற்பகல் கூடிய அமைச்சரவை விசேட பெறுகைக் குழுவினால் இந்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

(v) அத்திகதிலேயே 72,000 மெட்ரிக் தொன் யூரியாவைப் பெற்றுக்கொள்வதற்காக் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட பிழையான விடயங்களின் மூலம் அமைச்சரவையினூடாக இல்லாது நேரடியாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 1 மற்றும் 2 ஆகிய பந்திகளுக்காக பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டினைப் பெற்றுக்கொள்ளுதலுக்கு உட்பட்டு அமைச்சரவைத் தீர்மானம் வழங்கப்பட்டிருந்தும் அவ்வாறு பொதுத் திறைசேரியின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vi) இச்சந்தர்ப்பத்தில் பெறுகை நடைமுறைகளுக்கு முரணான வகையில் 1 மெட்ரிக் தொன் அமெரிக்க டொலர் 316.20 இற்கு 36,000 மெட்ரிக் தென் யூரிய (பிரல்டி) இனைப் பெற்றுக்கொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களுக்கு 1 மெட்ரிக் தொன் இற்காக பிரல்டி யூரியாவின் விலைக்கே 72,000 மெட்ரிக் தொன் யூரியா கிரனியூலாவினை பெற்றுக்கொள்வதற்காக அக்ரி கொமோடிடீஸ் பினான்ஸ் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது அதற்கிணங்க நாட்டின் தேவைப்பாட்டினை விட மேலதிகமாக 36,000 மெட்ரிக் தொன்களை பெற்றுக்கொண்டதன் காரணமாக அண்ணளவாக ரூபா 1,764 மில்லியன் பெறுமதியான பசளை மேலதிகமாக இறக்குமதி செய்யப்பட்டிருந்தது.

(vii) 2017 திசெம்பர் 14 ஆந் திகதி கிரனியூலா யூரியாவின் கப்பல் வரையுமான விலை (FOB) அ.டொலர் 206 இற்கும் அ.டொலர் 240 இற்கும் இடையில் காணப்பட்டதுடன் போக்குவரத்து மற்றும் ஏனைய செலவுகளுக்காக அ.டொலர் 30 செலவு செய்யப்பட்டிருந்தனால் 1 மெட்ரிக் தொன்னின் உச்ச விலை அண்ணளவாக அமெரிக்க டொலர் 270 ஆக இருத்தல் வேண்டும். எனினும், ஒப்பந்தக்காரருடன் 1 மெட்ரிக் தொன் அமெரிக்க டொலர் 316.20 வீதம் பெற்றுக்கொள்வதற்கு இணங்கியிருந்தன் மூலம் 72,000 மெட்ரிக் தொன்களுக்காக அண்ணளவாக ரூபா 519.17 மில்லியன் மிகைக் கொடுப்பனவை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

(viii) 2017 சிறு போகத்திற்குத் தேவையான பசளைகளை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கு எனக் குறிப்பிட்டு பெறுகை நடைமுறைகளுக்கு முரணாக பசளைகளைப் பெற்றுக்கொள்வதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மேற்கூறிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் பசளை இருப்பை பெற்றுக்கொள்வதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மேற்கூறிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் பசளை இருப்பை பெற்றுக்கொள்ள வேண்டிய திகதி திசெம்பர் 28 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்தும் அதிலிருந்து 10 நாட்களுக்குப் பின்னர் அதாவது 2018 சனவரி 08 ஆந் திகதி இப் பசளை இருப்பில் 40,500 மெட்ரிக் தொன் கிடைத்திருந்ததுடன் எஞ்சியுள்ள 32,000 மெட்ரிக் தொன் 2018 சனவரி 15 ஆந் திகதியே கிடைத்திருந்தது. அதற்கிணங்க 2017 சிறு போகத்தில் விவசாயிகளின் பசளைத் தேவைப்பாட்டை உரிய வேளைக்குப் பூர்த்தி செய்ய முடியாதிருந்தது.

**2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) வாகனங்களின் எரிபொருள் நுகர்வைப் பரீட்சித்தல்**

2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 3.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சு பயன்படுத்திய 66 வாகனங்களுக்காக மீளாய்வாண்டிற்கான எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சிற்குச் சொந்தமான 17.199 ஹெக்டெயர் காணியும் அதில் அமைந்துள்ள விவசாய அமைச்சிற்குச் சொந்தமான கட்டிடத் தொகுதியும் மீளாய்வாண்டிலிருந்து விளைவற்றுக் காணப்பட்டது.

(ii) பயன்படுத்துவதிலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்ட ஒரு ஜீப்பும் 08 மோட்டார் சைக்கிள்களும் விளைவற்றுக் காணப்பட்டதுடன் இந்த வாகனங்களைப் பழுது பார்த்து பயன்படுத்துவதற்கு அல்லது விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளிதரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

மீளாய்வாண்டின் இறுதியளவில் அமைச்சிற்கு சொந்தமான 48 வாகனங்கள் முறையாக ஒப்படைக்கப்படாது 16 வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

**(ஈ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

அமைச்சினால் ஏனைய 05 அமைச்சுக்கள் மற்றும் 02 நிறுவனங்களுக்குச் சொந்தமான ரூபா 70,158,373 மொத்தப் பெறுமதியான 15 வாகனங்களும் பெறுமதி வெளிப்படுத்தப்படாத ஏனைய 02 அமைச்சுக்களுக்குச் சொந்தமான 06 கார்களும் பொறுப்பேற்கப்படாது முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

### 2.5 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்

#### 2.5.1 நிதி ஏற்பாட்டினை மிகைத்து பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்தல்

04 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 30,729.4 மில்லியன் நிதி ஏற்பாட்டை பத்து சதவீதத்தால் (ரூபா 3,195.7 மில்லியன்) மிகைத்து ரூபா 3,385.6 மில்லியன் கடப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

### 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவையாகும். அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றன.

(அ) நெற்காணி பசளை நிவாரணப் பணத்தை செலுத்துவதற்காக வழங்கப்பட்ட 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய NFS/FCG/(4)/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு விவசாயிக்கு ஒரு போகத்திற்கு கிடைக்க வேண்டிய உச்ச அளவு நிவாரணம் ரூபா 25,000 இற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், ஏனைய துறைப் பயிர்களுக்காக பசளை நிவாரணப் பணத்தைச் செலுத்துவதற்காக வழங்கப்பட்ட 2017 செப்தெம்பர் 19 ஆந் திகதிய NFS/FCG(OFC)/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு ஆண்டிற்கு ஒரு ஹெக்டெயருக்குச் செலுத்தக் கூடிய உச்ச அளவு நிவாரணப் பணம் ரூபா 10,000 ஆகும். அதற்கிணங்க உச்ச அளவில் நெல் மற்றும் ஏனைய துறைப் பயிர்கள் ஆகிய இரண்டையும் பயிரிடுகின்ற ஒரு விவசாயிக்கு ஒரு போகத்திற்கு பெற்றுக்கொள்ளக் கூடிய உச்ச அளவு பசளை நிவாரணப் பணம் ரூபா 35,000 ஆகும். எவ்வாறாயினும் தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 2017 சிறுபோகத்தில் 09 விவசாயிகளுக்கு ரூபா 402,500 மொத்தப் பணமானது ரூபா 35,000 உச்ச அளவு எல்லையினை மிகைத்து செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) விவசாய சங்கங்களைப் பதிவு செய்யும் போது இணக்கப்பாடானது வெளியிடப்பட்டுள்ள 1991 இன் 4 ஆம் இலக்க விவசாயிகள் அமைப்பு மாதிரி உப நியதிச் சட்டத்தின் 18 ஆவது பிரிவின் பிரகாரம் விவசாயிகள் சங்கங்களால் வருடாந்தம் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தும் 2017 ஆம் ஆண்டிற்காக உத்தியோகத்தர்களை நியமிக்காத மாத்தளை மாவட்டத்தின் தம்புள்ளை கமநல சபை அதிகாரப் பிரதேசத்திலுள்ள 4 விவசாய சங்கங்களுக்கு ரூபா 9,447,154 மொத்த தொகையான 5 ஒப்பந்தங்கள் அதிகாரம் இன்றி வழங்கப்பட்டிருந்தது.

(இ) நெற்காணிப் பசளை நிவாரணப் பணத்தைச் செலுத்தும் போது பயிரிடப்படுகின்ற வயல் காணிகள் தொடர்பாக உரிய போகங்களில் பயிரிடப்படாத வயல் காணிகளுக்காகவும் பசளை நிவாரணப் பணம் செலுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அதற்கிணங்க தெரிவுப் பரிசோதனைக்கு உட்பட்ட 16 மாவட்டங்களில் பயிரிடப்படாத வயல் காணிகளுக்காகச் செலுத்தப்பட்ட மொத்த நிவாரணப் பணம் ரூபா 1,131,723,030 ஆகும்.

### 2.7 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

அமைச்சிற்குரிய 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சரி செய்யப்படாத பந்திகளுக்கான தொடர்பு கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | தொடர்புபட்ட விடயம் |
| --- | --- |
| 3.5.2 (அ) | பசளை நிவாரணப் பணத்தை செலுத்தும் போது ரூபா 1,237.9 மில்லியன் தொகையான பிழையான கொடுப்பனவு |
| 3.5.3 | சேதனப் பசளை உற்பத்தி பயன்பாடு, மற்றும் ஊக்குவித்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் செயல் முன்னேற்றம் |
| 3.5.6 | சிறிய குளங்கள் மற்றும் கால்வாய்களை புனரமைப்புச் செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களில் காணப்பட்ட குறைபாடுகளை சரிசெய்யாமை. |
| 3.5.7(ஈ) | ரூபா 58 மில்லியன் செலவில் மேற்கொள்ளப்பட்ட வீட்டுக்கு வீடு விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்களின் பிரகாரம் தரவு முறைமை ஒன்று தயாரிக்காமை. |
| 3.7 | உரிய தரப்பினர்களிடமிருந்து அங்கீகாரத்தினையும் ஆலோசனையையும் பெற்றுக்கொள்ளாது அமைச்சிற்கு வாடகை அடிப்படையில் ஒரு கட்டிடத்தைப் பெற்றுக்கொண்டமை மற்றும் அக்கட்டிடத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யாமை. |

## 2.8 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டின் இரண்டு போகங்களுக்காகவும் அதே போல் 2017 ஆம் ஆண்டில் சிறு போகத்திற்காகவும் 3,142 நபர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 28,245,000 நிவாரணப் பணம் உரிய விவசாயிகளின் கணகக்கிற்கு செலவு வைக்கப்படாது ஏனைய நபர்களின் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் இரண்டு போகங்களுக்காகவும் அதே போல் 2017 ஆம் ஆண்டில் சிறு போகத்திற்கும் ரூபா 5.48 பில்லியன் மொத்த தொகையான உரிய மூன்று போகங்களுக்கான நிவாரணப் பணமானது உரிய காலம் கடந்த பின்னர் செலுத்தப்பட்டிருந்தது. அத் தாமதத்தின் காரணமாக விவசாயிகளுக்கு உரிய வேளையில் வயல்களுக்கு பசளையிடுவதற்கு முடியாதிருந்தது.

(இ) கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கல்விப் பிரிவின் பதவியணியினரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வெளித்தரப்பினர்களால் பசளை நிவாரணப் பணத்தை விவசாயிகளின் கணக்கிற்குச் செலவு வைக்கும் செயற்பாடு மேற்கொள்ளப்படுவதுடன் இது சம்பந்தமாக பசளை செயலகத்தின் மேற்பார்வையும் ஈடுபாடும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ஈ) நெற்காணி பசளை நிவாரணப் பணம் வழங்குவதனை ஆக்கபூர்வமாக அமுல்ப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கணனி முறைமையினைப் பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கணனி தரவு வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளும் நடைமுறை தொடர்பாக கமநல சேவை நிலையங்கள் மட்டத்தில் ஏற்படுத்தப்பட வேண்டிய வசதிகள் மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல் ஆகிய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளாது இந் நிகழ்ச்சித் திட்டங்கள் 2017 / 2018 பெரும் போகத்திற்கான பசளை நிவாரணப் பணத்தைச் செலுத்தும் போது பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) இப்புதிய கணனி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழும் தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட மாத்தளை, அளுகொல்ல கமநல சேவை நிலையத்தைச் சார்ந்த 985 விவசாயிகளுக்கு ரூபா 4.83 மில்லியன் நிவாரணப் பணம் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 375.7 மில்லியன் செலவில் ஸ்தாபிக்கப்பட்ட புதிய கணனி முறைமைகளின் மூலம் பசளை நிவாரணம் பணத்தைச் செலுத்துவதிலுள்ள குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்ள முடியாதிருந்தது. என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) மீளாய்வாண்டில் ரூபா 275 மில்லியன் நிதி ஏற்பாட்டில் 2,000 கிராமங்களை உள்ளடக்கும் வகையில் பழவகைகள் கிராம நிகழ்ச்சிதிட்டம் ஒன்றின் கீழ் 2 மில்லியன் அளவிலான பழ நாற்றுக்களைப் பயிரிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் பழ நாற்றுக்களை வழங்கும் நடைமுறை தொடர்பாக கவனம் செலுத்தப்படாது உரிய நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டதன் காரணமாக ரூபா 70.65 மில்லியன் செலவில் 207 கிராமங்களில் 251,675 நாற்றுக்கள் மாத்திரம் நடுகை செய்யப்பட்டிருந்தன.

(ஊ) அமைச்சினால் ரூபா 80 மில்லியன் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவிக்கும் குறிக்கோளுடன் ‘‘சாரலங்கா’’ கடன் திட்டம் விவசாய வங்கிகளினூடாக நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் வழங்கப்பட்ட கடன் அளவு ரூபா 27.65 மில்லியனாக இருந்ததனால் கடன் வழங்கும் செயல் முன்னேற்றம் 35 சதவீத மட்டத்தில் காணப்பட்டது.

(எ) விவசாய அமைச்சின் கீழுள்ள அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் மூலம் ரூபா 5.35 மில்லியன் செலவு செய்து 07 வகையான விவசாயப் பயிர்களில் 04 வகையான கடின இரும்புகள் உள்ளடக்கியுள்ளனவா எனவும் அவ்வாறு உள்ளடங்கியிருந்தால் அதன் உள்ளடக்கம் என்ன என்பதனைப் பரீட்சித்து தொடர்புபட்ட அனைத்து தரப்பினர்களுக்கும் அது தொடர்பாக அறிந்து கொள்வதற்காக பரிசோதனை அறிக்கையை அனுப்பி செயற்திட்டத்தின் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும், உரிய நிகழ்ச்சித்திட்டம் 2017 மற்றும் 2018 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் 500 மாதிரிகள் வீதம் 1000 மாதிரிகளைப் பரீட்சிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 2017 ஆம் ஆண்டில் 500 மாதிரிகளை மாத்திரம் பரீட்சித்து நிகழ்ச்சித்திட்டம் கைவிடப்பட்டிருந்ததுடன் இதில் ஒரு மாதிரியினைப் பரீட்சிப்பதற்கு ரூபா 10,700 வீதம் 500 மாதிரிகளுக்காக ரூபா 5.35 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தும் அறுவடைக்கும் பிந்திய தொழில்நுட்ப நிறுவனமானது இதற்காக உள்ளபடியாக செலவு செய்தது ரூபா 1.96 மில்லியன் மாத்திரமாகும்.

(ஏ) 2016 ஆம் ஆண்டில் ஒரு வாகனத்திற்கு ஏற்பட்ட ரூபா 6 மில்லியன் முழுமையான சேதத்தை நிதிப்பிரமாணம் 104(4) இன் படியான விசாரணை அறிக்கையில் பணிக்கப்பட்டவாறு வாகனத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்தும் சாராதியிடமிருந்தும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 பணப்பெறுமதிக் கணக்காய்வு

2015 மே 20 ஆந் திகதிய 11/2015 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு உத்தியோகபூர்வ விழாக்களை ஒழுங்குபடுத்தும் போது எளிதாகவும் சிக்கனமாகவும் அந்த விழாவை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 38.07 மில்லியன் செலவு செய்து காலநிலை மாற்றங்களைக் கடைப்பிடித்தல் நிகழ்ச்சித்திட்டமானது சனாதிபதி அவர்களின் தலைமையில் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருந்ததுடன் தலைப்பு தொடர்பாக ஒரு சிறிய விரிவுரை மாத்திரம் இடம் பெற்றிருந்தது. அரசாங்கத்தின் பெறுகை நடைமுறை பின்பற்றப்படாது மேடையை நிர்மாணிப்பதற்காக ரூபா 3.6 மில்லியன் ஒரு தனியார் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ''கண்ணீர்'' என்ற பெயரில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டத்தை முடியாதிருந்தும் அதற்காக ரூபா 515,000 செலவிடப்பட்டிருந்தது.

## 2.10 பொது மக்களுக்காக சேவைகளை நிறைவேற்றல்

அமைச்சில் பொது மக்களின் முறைப்பாட்டை பொறுப்பேற்பதற்காக முறைப்பாட்டுப் பெட்டி பயன்படுத்தப்படாததுடன் முறைப்பாட்டைப் பொறுப்பேற்பதற்காக ஒரு பதிவேடு பேணப்பட்டிருந்தும் அதனைக் காட்சிப்படுத்துவதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்ப்டிருக்கவில்லை. அவ்வாறே அமைச்சின் இணையதளத்தின் மூலம் பொது மக்களின் முறைப்பாட்டைப் பொறுப்பேற்கும் நடைமுறையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.11 கடமைகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் அமைச்சிற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்களுகம் அவை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்களும் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறி நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டுவருபவை | 561.28 | 558.28 | 3.00 | 0.50 |
| | மூலதனம் | 1,268.35 | 764.30 | 504.05 | 39.74 |
| | **மொத்தம்** | **1,829.63** | **1,322.58** | **507.05** | **27.71** |
| 2014 | மீண்டுவருபவை | 35,857.93 | 32,744.01 | 3,113.92 | 8.68 |
| | மூலதனம் | 872.59 | 834.39 | 38.20 | 4.38 |
| | **மொத்தம்** | **36,730.52** | **33,578.40** | **3,152.12** | **8.58** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2015 | மீண்டுவருபவை | 53,819.66 | 53,017.92 | 801.74 | 1.45 |
| | மூலதனம் | 1,188.06 | 712.96 | 475.10 | 40.00 |
| | **மொத்தம்** | **55,007.72** | **53,730.88** | **1,276.84** | **2.32** |
| 2016 | மீண்டுவருபவை | 39,847.22 | 32,497.06 | 7,350.16 | 18.45 |
| | மூலதனம் | 5,123.11 | 2,248.61 | 2,874.50 | 56.11 |
| | **மொத்தம்** | **44,970.33** | **34,745.67** | **10,224.66** | **22.74** |
| 2017 | மீண்டுவருபவை | 38,829.39 | 38,303.28 | 526.11 | 1.35 |
| | மூலதனம் | 7,872.77 | 3,338.98 | 4,533.79 | 57.59 |
| | **மொத்தம்** | **46,702.16** | **41,642.26** | **5,059.90** | **10.83** |

மேற்கூறிய தகவல்களின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டைத் தவிர்த்து கடந்த 05 ஆண்டுகள் காலத்தில் திறைசேரியால் மூலதனச் செலவுகளுக்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் குறிப்பிடத்தக்க அளவானவை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக 2017 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டை பயன்படுத்துவது தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமை**

03 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 262.15 தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) மிகை நிதி ஏற்பாடு வழங்குதல்**

69 செலவு விடயங்களுக்காக ரூபா 6,733.48 மில்லியன் மொத்த தொகையான மிகை நிதி ஏற்பாடு வழங்கப்பட்டதன் காரணமாக, அச்செலவு விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டில் ரூபா 2,449.14 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக சேமிப்பு வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 10 சதவீதத்திலிருந்து 93 சதவீதம் வரையான வீச்சுடைய அளவில் காணப்பட்டது.

**(இ) நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு 1500 சிறிய குளங்களின் சேற்று மண்ணை அகழ்தல், புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதன் மூலம் விவசாயக் காணிகளுக்கு அதிக நீர் இயலளவை வழங்குதல், எல்லங்க குளத்தை மேம்படுத்துதல் ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 3,000 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 526.18 மில்லியன் மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் 2016 செப்தெம்பர் 08 ஆந் திகதிய MNPEA 03/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை, கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2017 யூன் 21 ஆந் திகதிய 7/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை, ஒப்பந்த உடன்படிக்கை என்பவற்றின் பிரகாரம் போட்டியின்றி

வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களானது உடன்படிக்கையில் கையொப்பமிட்ட விவசாய அமைப்புக்களால் உப ஒப்பந்தம் வழங்கலாகாது என்ற போதிலும் மாத்தளை மாவட்டத்தில் 11 விவசாய அமைப்புக்களால் 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 35,844,307 ஒப்பந்தப் பெறுமதியான 18 வேலைகள் 5 சதவீத தரகுப் பணத்தின் கீழ் உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தன.

(ii) தம்புள்ள கமநல அபிவிருத்தி அதிகாரப் பிரதேசத்தில் ரூபா 2,519,640 செலவில் நித்தவெல்கொல்ல பங்வெவ குளத்தை ஆழமாக்கும் ஒப்பந்தத்தின் போது குளக்கட்டின் 0.30 சதுர மீற்றர் அளவான மண் அகற்றப்பட்டு அதன் மீது புற்கற்றைகள் பிடித்து நீர் ஊற்றுவதற்காக ரூபா 141,360 செலவு செய்யப்பட்டிருந்தும் 2017 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை புற்கற்றைகள் பிடிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பலாபத்வெல கமநல அபிவிருத்தி அதிகாரப் பிரதேசத்தில் ரூபா 1,737,850 செலவில் ரத்மல்கஹ கொங்ரீட் கால்வாயின் அணை 03 மீற்றர் உயரத்திற்கு நிர்மாணிக்கப்பட வேண்டிய போதிலும் அணையின் முழுமையான உயரம் 2.2 மீற்றர் என்பது 2017 ஒக்தோபர் 31 ஆந் திகதி மேற்கொண்ட களப்பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க அத்திவாரத்திற்காகவும் கொங்ரீட்டிற்காகவும் முறையே ரூபா 396,015 மற்றும் ரூபா 34,312 ஆக ரூபா 430,327 மொத்த தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iv) கம்பிஸ்ஸ கமநல சேவை அதிகாரப் பிரதேசத்தில் எஹடுல்லா குளத்தின் வான் கதவுகளைத் திருத்தம் செய்தல் மற்றும் தெற்கு அணையில் வான் கதவை நிர்மாணிப்பதற்காக ரூபா 368,277 மொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தும் அந்த வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. குளக்கட்டின் 2.40 ஹெக்டெயர் புதர் காட்டை வேரோடு பிடுங்கி பாதுகாப்பாக அகற்றுவதற்காக ரூபா 89,078 செலுத்தப்பட்டிருந்தும் அந்த வேலை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

மேலும் குளக்கட்டின் மேல்பரப்பில் 75 மில்லி மீற்றர் தடிப்பில் 377 கன மீற்றர் அளவான மண்னை அகற்றுதல் குளக்கட்டின் மேற்பரப்பில் மண் பரப்பி நீர் ஊற்றல், குளக்கட்டின் மீது புற்கற்றைகள் பரப்புதல் என்பவற்றிற்காக ரூபா 2,128,400 செலுத்தப்பட்டிருந்தும் முறையாக அச் செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்காததனால் குளக்கட்டின் 05 இடங்களில் 20,08,18,19,10 மீற்றர் நீளத்தில் கீழிறங்கியிருந்தது.

(v) கெதரவெல கமவெவ விவசாய வீதி ரூபா 1,905,545 செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் 46.50 கன மீற்றர் கொங்ரீட்டிற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தும் அளவை செய்த போது பயன்படுத்தப்பட்ட கொங்ரீட்டின் அளவு 37.64 கனமீற்றர்களாகும். அதற்கிணங்க 8.86 கியூப் கொங்ரீட்டிற்காக ரூபா 143,178 ஒப்பந்தக்காரருக்கு மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(vi) திம்பிரிகஸ்வெவ குளத்தை ரூபா 3,207,383 செலவில் புனரமைப்புச் செய்யும் போது குளக்கட்டின் மீது 150 மில்லி மீற்றர் மண் போட்டு பரப்புவதற்காக ரூபா 2,335,290 செலுத்துவதற்கு சிபார்சு செய்பட்டிருந்ததும் 2017 மார்ச் 08 ஆந் திகதி மேற்கொண்ட கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் அச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. குளத்திலிருந்து அகற்றிய மண் மற்றும் சேறுகளில் ஒரு பகுதி குளக்கட்டுக்கு அருகாமையில் குவித்து வைக்கப்பட்டிருந்ததுடன் அம்மண் மீண்டும் குளத்திற்குள் அடித்துச் செல்லப்பட்டுக் காணப்பட்டது.

(vii) இதிகஸ்வெவ குளத்தை ரூபா 2,232,039 செலவில் புனரமைப்புச் செய்யும் போது குளத்திற்கு அருகில் ஆழத்தில் மண்னைவெட்டி தட்டுக்களாகப் போட்டு நீர் ஊற்றி

பரப்புவதற்காக ரூபா 1,272,480 பணத்தை செலுத்துவதற்கு சிபார்சு செய்யப்பட்டிருந்தும் மண் பரப்புதல் இடம் பெற்றிருக்காததுடன் அதன் காரணமாக மண் தட்டுக்கள் குளத்திற்குள் அடித்துச் செல்லப்பட்டதனால் இருந்த நிலையை விட மோசமான நிலைக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. குளக்கட்டில் புற்கற்றைகள் பிடிப்பதற்கு ரூபா 216,240 கொடுப்பனவு செய்வதற்கு சிபார்சு செய்யப்பட்டிருந்தும் அச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(viii) மாத்தளை மாவட்டத்தின் 3 கமநல சேவை நிலையங்களில் தெரிவுப் பரிசோதனைக்காகத் தெரிவு செய்யப்பட்ட 29 நிர்மாண வேலைகளில் ரூபா 40,667,671 கூட்டு மொத்த ஒப்பந்த பெறுமதியான 24 செயற்திட்டங்களுக்காக விவசாய அமைப்புக்களின் பணம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது விவசாய அமைப்புக்களுக்குச் சொந்தமான வங்கி கணக்குகளை பரீட்சித்த போது வெளிப்படுத்தப்பட்டதனால் உரிய செயற்திட்டங்கள் நிறைவேற்றப்படாது உப ஒப்பந்தங்களின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளமை வெளிப்படுத்தப்பட்டது.

(ix) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் 2016 செப்தெம்பர் 08 ஆந் திகதிய NNPEA 3/2016 (திருத்தப்பட்ட) சுற்றறிக்கையின் பிரகாரம் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் போட்டியின்றி விவசாய அமைப்புக்களுக்கு வழங்கக்கூடிய ஒப்பகந்தங்களின் விலை ரூபா 5 மில்லியனுக்கு அதிகரித்திருக்காதிருக்க வேண்டிய போதிலும் அதற்கு முரணாக மாத்தளை மாவட்டத்தில் கிம்பிஸ்ஸ, ஹெட்டிபொல, தம்புள்ளை ஆகிய கமநல சேவை அதிகார பிரதேசத்திலுள்ள 5 விவசாய அமைப்புக்களுக்கு ரூபா 5 மில்லியன் மொத்த பெறுமதியை மிகைத்து ரூபா 29,258,007 ஒப்பந்தப் பெறுமதியான 10 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. மேலும், மேற்கூறிய சுற்றறிக்கையின் பிரகாரம் போட்டித்தன்மையின்றி ஒப்பந்தத்தை வழங்குகையில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் விவசாய அமைப்புக்களாக 2 ஆண்டுகளுக்கு முன்னர் பதிவு செய்து கொண்டிருக்க வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 2017 ஆம் ஆண்டில் பதிவு செய்து கொண்ட மாத்தளை மாவட்டத்திலுள்ள ஹெட்டிபொல மற்றும் கிம்பிஸ்ஸ கமநல அதிகாரப் பிரதேசத்திலுள்ள 4 விவசாய அமைப்புக்களுக்கு ரூபா 14,016,365 மொத்த தொகையான 5 நிர்மாண வேலைகள் வழங்கப்பட்டிருந்தன.

(x) கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2017 யூன் 21 ஆந் திகதிய 7/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் ஒப்பந்த உடன்படிக்கையின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் போட்டித்தன்மையின்றி வழங்கப்பட்ட ஒப்பந்தங்களை வெளித்தரப்பினர்களுக்கு வழங்காதிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், கரலியத்த கமநல சேவை அதிகாரப் பிரதேசத்திலுள்ள மல்உல்ல, உடகலஉட மற்றும் கலஉட விவசாய அமைப்புக்கள முறையே ஒப்பந்தப் பெறுமதி ரூபா 1,591,026 தொகையான கல்பொக்க குளம், ரூபா 2,292,677 தொகையான பெந்தியாவ குளம், ரூபா 1,105,670 தொகையான உட அஸ்வெத்தும கால்வாய் என்பவைகளின் புனரமைப்பு நடவடிக்கைகள் வெளித்தரப்பினர்களுக்கு 5 சதவீத தரகுப் பணத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. மேலும், ஹங்குரன்கெத்த கமநல சேவை அதிகாரப் பிரதேசத்தில் ரூபா 695,450 தொகையான வெல்லதொடஅராவ கால்வாயை புனரமைப்புச் செய்யும் நடவடிக்கை தமுனுமேய விவசாய அமைப்பினால் வெளி நபர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(xi) கரல்லியத்த கமநல சேவை அதிகாரப்பிரதேசத்திருள்ள மல் உல்ல குளத்தை புனரமைக்கும் போது 4.12 கன மீற்றர் கொங்கிரீட் மற்றும் 120 கிலோ கிராம் கம்பிக்காக ரூபா 91,601 மொத்த தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(xii) கரலியத்த கமநல சேவை அதிகாரப் பிரதேசத்திலுள்ள கல்பொக்க குளத்தினை ரூபா 1,591,026 தொகைக்கு புனரமைப்புச் செய்வதற்கான அளவீட்டுப் பத்திரத்தினை தயாரிக்கும் போது தொழில்நுட்ப உத்தியோகத்தரால் வேண்டுமென்றே பிழையான அளவீட்டைக் காட்டி ரூபா 872,042 தொகையான மிகை மதிப்பீடு தயாரித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. மேலும், இந்த ஒப்பந்தத்தின் போது உயரத்தை பிழையாகக் குறிப்பிட்டு அதனைப் பயன்படுத்தி 700 கன மீற்றர் மண் இற்காக ரூபா 275,800 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**2.12 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

சேவையை விட்டுச் சென்ற ஐந்து உத்தியோகத்தர்களிடமிருந்து 13 ஆண்டுகளிலிருந்து 20 ஆண்டுகள் வரையான கால வீச்சில் அறவிட வேண்டியிருந்த ரூபா 268,061 இடர் கடன் மற்றும் ஆதனக் கடன் மீதி, 17 ஆண்டுகளுக்கு முன்னர் வேலையிலிருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்ட இரண்டு இலிகிதர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 240,267 தொகையான இடர் மற்றும் ஆதனக் கடன் மீதி மற்றும் 2009 ஆம் ஆண்டில் மரணமடைந்த ஒரு உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 190,575 கடன் மீதியும் அதே போல் 2015 ஆம் ஆண்டில் இளைப்பாறிய ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 27,050 கடன் மீதியுமாக ரூபா 725,953 மொத்த தொகையான கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு அமைச்சிற்கு முடியாதிருந்தது.

**2.13 கட்டுநிதிக் கணக்கு**

அமைச்சு தொடர்பான கட்டுநிதிக் கணக்கின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 456,000 ஆகும். இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையால் திருத்திய நிதிப் பிரமாணம் 371(5) இன் பிரகாரம் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் பெற்றுக் கொள்ளப்பட்ட செயல் நிமித்த கட்டு நிதி தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சின் 38 உத்தியோகத்தர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 1,384,160 தொகையான உப கட்டு நிதியைத் தீர்த்து வைத்தல் 21 நாட்களிலிருந்து 87 நாட்கள் வரை தாமதித்த 101 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டின் போது 11 உத்தியோகத்தர்கள் 12 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொண்ட ரூபா 136,439 செயல் நிம்த்த உப கட்டு நிதி 01 நாளிலிருந்து 24 நாட்கள் வரையான காலம் கையில் வைத்திருக்கப்பட்டு உப கட்டுநிதி பெற்றுக்கொண்ட செயற்பாடு நிறைவேற்றப்படாது அப்பணம் மீண்டும் அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது.

**2.14 பொது வைப்புக் கணக்கு**

அமைச்சின் கீழுள்ள 04 பொது வைப்புக் கணக்குகளின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் ரூபா 12.8 மில்லியன் கூட்டுமொத்தமாகும். ஏனைய நிறுவனங்களால் பல்வேறு செயற்பாடுகளுக்காக 11 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 2,037,722 பணம் உரிய செயற்பாடுகளை நிறைவேற்றாது வைப்புக் கணக்குகளில் வைத்திருக்கப்பட்டன.

**2.15 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை.**

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | கடமைத் தொலைப்பேசி பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) |
| (ஆ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| (இ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |

### 2.16 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்.

நிதிப்பிரமாணம் 1646 இன் பிரகாரம் மீளாய்வாண்டில் ஓடிய 26 வாகனங்களுக்குரிய ஓட்ட அட்டவணைகளும் 34 வாகனங்களுக்குரிய மாதாந்த பொழிப்புக்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.17 மனித வளங்கள் முகாமைத்துவம்

#### 2.15.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர், ஆளணி வேதனத்திற்கான செலவு என்பன

மேலே 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமான, மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளணி வேதன செலவுத் தொகுதிக்காக ரூபா 657,500,480 செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு தனி நபருக்கான செலவு ரூபா 487,760 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஸ்ட மட்டம் | 139 | 114 | 25 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 11 | 03 | 08 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 1359 | 1100 | 259 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 153 | 127 | 26 | - |
| (v) | அமையம்/தற்காலிகம்) | 02 | 04 | - | 02 |
| | **மொத்தம்** | **1664** | **1348** | **318** | **02** |

அமைச்சின் 1305 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு மீளாய்வாண்டில் பயிற்சிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.18 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு பிணை வைத்தல்

நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய சிறாப்பர், களஞ்சியத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர், கணக்காளர் ஆகிய உத்தியோகத்தர்கள் பிணை வைத்திருக்கவில்லை.